**ஜி. திலீப் அமுதன் எதிர் வட மாகாண சபை**

*இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழு மேன்முறையீடு (அந்நபரினூடாக) /21/2017- 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் உரிமைக்கான சட்டத்தின் பிரிவு 32(1) இன் கீழான கட்டளை மற்றும் 2016 ஆம் ஆண்டு தகவல் உரிமைக்கான விதிகளின் (கட்டணம் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறை) 28 ஆம் விதிக்கு கீழான நடபடிமுறை பதிவு - மேன்முறையீடானது 10.07.2017, 24.04.2018, 15.05.2018, 03.07.2018 மற்றும் 07.08.2018 திகதிகளில் இடம்பெற்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வமான சந்திப்புக்களின் ஒரு அங்கமாகக் கேட்கப்பட்டது.*

*நடபடிமுறை பதிவுகள் மற்றும் ஆணை என்பன 09 ஒக்ரோபர் 2018 அன்று வழங்கப்பட்டது.*

**தலைவர்:** திரு. மஹிந்த கம்மம்பில

**ஆணைக்குழு உறுப்பினர்கள்:** செல்வி. கிஷாலி பின்ரோ ஜயவர்தன
கலாநிதி. செல்வி திருச்சந்திரன்
திரு. எஸ். ஜி. புஞ்சிஹேவா
நீதிபதி ரோஹினி வெல்கம

**அறிவித்தல் வழங்கப்பட்ட நபர்:**

| | |
|---|---|
| **தகவல் உரிமைக்கான கோரிக்கை பதியப்பட்டது** | 23.02.2017 |
| **தகவல் அலுவலர் பதிலளித்தது** | 03.30.2017 |
| **குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடம் முதலாவது மேன்முறையீடு பதியப்பட்டது** | 07.04.2017 |
| **குறித்தளிக்கப்பட்ட அலுவலர் பதிலளித்தது** | 08.05.2017 |
| **தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு பதியப்பட்டது** | 29.05.2017 |

**நிகழ்வுகள் பற்றிய சுருக்கப் பின்னணி:**

மேன்முறையீட்டாளர் வல்வெட்டித்துறை நகரசபை கலைக்கப்பட்டதற்கு காரணமாக அமைந்த விசாரணை அறிக்கையினை தனது தகவல் கோரிக்கையில் கோரியிருந்தார். அவருடைய தகவல் கோரிக்கைக்கு பதிலிறுக்கும் முகமாக அவருக்கு அவ் அறிக்கையின் சுருக்கம் ஒரு பக்கத்தில்

வழங்கப்பட்டது. இதனையடுத்து, மேன்முறையீட்டாளர் அவருடைய தகவலுக்கான கோரிக்கை பூர்த்தி செய்யப்படவில்லையென குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீடு செய்தார். அவருடைய மேன்முறையீட்டிற்கு பதிலளித்த குறித்தளிக்கப்பட்ட அலுவலர் முழு அறிக்கையினையும் வழங்குதல் நகர சபையின் முன்னாள் உறுப்பினர்களின் அக்கறைகளைப் பாதிக்கும் என்பதுடன் அவர்களுள் சிலர் தற்போதைய நகர சபை உறுப்பினர்களாகவும் காணப்படுவதனால் அவ்வாறு முழு அறிக்கையினையும் வெளிவிடுதலானது 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 5 (1) (ஓ) இன்படி அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் முன்னுரிமையினைப் பாதிப்பதாக அமையும் என கூறினார். இதனைத் தொடர்ந்து, மேன்முறையீட்டாளர் தன்னுடைய தகவல் கோரிக்கை முழுமையாகப் பூரணப்படுத்தப்பட வேண்டுமென கோரி தகவலுக்கான உரிமைகள் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்தார்.

**விளக்கத்தின்போது தோன்றிய விடயங்கள்**

இச்சந்தர்ப்பத்தில், மேன்முறையீட்டாளர் வல்வெட்டித்துறை நகரசபை கலைக்கப்படுவதற்கு காரணமாக அமைந்த கண்டறியப்பட்ட முடிவுகளை உள்ளடக்கிய விசாரணை அறிக்கையினை முழுமையாக வெளியிடும்படி கோரியிருந்தார். தகவல் அலுவலரிடமிருந்து பெற்றுக் கொண்ட ஒரு பக்க சுருக்கத்தினால் மற்றும் அதனைத் தொடர்ந்து நகர சபையின் முன்னாள் உறுப்பினர்களின் அக்கறைகளைப் பாதிக்கும் என்ற அடிப்படையில் முழு அறிக்கையினையும் வெளியிட முடியாது என்ற குறித்தளிக்கப்பட்ட அலுவலரின் நிராகரிப்பினால் அதிருப்தியுற்ற மேன்முறையீட்டாளர் அவருடைய ஆரம்ப கோரிக்கையினை நிவர்த்தி செய்து கொள்ளும் எதிர்பார்ப்புடன் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்தார்.

பதிவேடுகளில் வெளிப்படுத்தப்படுகின்றமைக்கு அமைவாக, இவ்விடயம் தொடர்பான விளக்கங்களில் (10.07.2018, 24.04.2018, 15.05.2018, 03.07.2018 மற்றும் 07.08.2018), குறித்தளிக்கப்பட்ட அலுவலரினால் முன்வைக்கப்பட்ட பிரிவு 5 (1) (ஓ) இன் கீழான முன்னுரிமைத் தொடர்பான விதிவிலக்கினை ஏற்றுக்கொள்வதற்கு ஆணைக்குழு மறுத்தது. குறிப்பிட்ட பிரிவின் பொருட்கோடலானது அனைத்து சந்தர்ப்பங்களிலும் மற்றும் ஒவ்வொரு விடயத்தினையும் மறுப்பதற்கான பொதுவான விதிவிலக்கு என்ற ரீதியில் பயன்படுத்தப்பட முடியாது. இவ்வாசகத்தின் பிரயோகமானது நியதிச்சட்ட ரீதியில் பெயரிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு உட்கிடையான நீட்டிப்புச் செயன்முறையொன்று காணப்பட முடியாதென ஆணைக்குழு கூறியது. எவ்வாறெனினும், மூன்றாந் திறத்தவர்களின் ஈடுபாடானது (மொத்தமாக 10 அதிகாரிகள் மற்றும் சாட்சிகள்), சட்டத்தின் பிரிவு 5(1)(i) இன் கீழான விதிவலக்கின் ஏற்பாகுந்தன்மை தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பதனைத் தேவைப்படுத்துகின்றது என்பதனை ஆணைக்குழு அவதானித்தது. ஆகவே, ஆணைக்குழு 10.07.2017 அன்று வெளியிட்ட தனது இடைக்கால ஆணையில், குறிப்பிட்ட விடயமானது சட்டத்தின் பிரிவு 32(1) இற்கு அமைவாக தொடர்புடைய அனைத்து பங்கேற்பவர்களினதும் பங்குபற்றுகையுடன் மீள ஆராயப்பட வேண்டும் என கூறியது.

அப்பணிப்பினைத் தொடர்ந்து, குறிப்பிட்ட விசாரணை ஆரம்பிப்பதற்கு பிரதான காரணமாக அமைந்த, முறைப்பாட்டினை மேற்கொண்ட பகிரங்க அதிகாரியின் வாக்குமூலத்தினை உள்ளடக்கிய பகுதியினை மாத்திரம் நீக்கிவிட்டு அறிக்கையின் ஏனைய பகுதிகளை மேன்முறையீட்டாளருக்கு வழங்கியுள்ளதாக பகிரங்க அதிகார சபை ஆணைக்குழுவிற்கு 23.04.2018 அன்று அறிவித்தது. குறிப்பிட்ட அவ்வாக்குமூலத்தினை வழங்கிய பகிரங்க அலுவலர் அதனை நம்பகத் தன்மை

அடிப்படையில் வழங்கியுள்ளதாகவும், அத்தகைய தகவல் பகிரங்கப்படுத்தப்படுவதனால் பழிவாங்கல் செயன்முறைகள் இடம்பெறலாம் என அச்சப்படுவதாகவும் கூறியதனைத் தொடர்ந்தே அக்குறிப்பிட்டத் தகவல்கள் வழங்கப்படவில்லை. குறிப்பிட்ட பகிரங்க அலுவலர் அவருக்கு காணப்பட்ட பகிரங்க அக்கறையின் காரணமாக குறிப்பிட்ட நகர சபையில் இடம்பெற்ற ஊழல் தொடர்பில் வெளிப்படுத்திய விடயங்களை தற்போது பகிரங்கப்படுத்துவோமாக இருப்பின் அது அவரை எதிர்மறையாகத் தாக்கும் என பகிரங்க அதிகார சபை கூறியது. எவ்வாறெனினும், பகிரங்க அக்கறையின் நிமித்தமே முழு அறிக்கையினதும் வெளிப்படுத்துகை கோரப்படுகின்றது என்ற நிலைப்பாட்டினை மேன்முறையீட்டாளர் கொண்டிருந்தார்.

இவ் ஆணைக்குழுவின் முன்னிலையில் 15.05.2018 அன்று கேட்கப்பட்ட விளக்கத்தினைத் தொடர்ந்து, பகிரங்க அதிகார சபையானது எம்மால் வழங்கப்பட்டப் பணிப்பிற்கு அமைவாக குறிப்பிட்ட விசாரணை அறிக்கையினை ஆணைக்குழுவின் ஆய்விற்காக முழுமையாக சமர்ப்பித்தது. குறிப்பிட்ட அவ் அறிக்கையினை ஆராய்ந்ததனூடாக, பிரிவு 5(1)(அ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அந்தரங்கம் தொடர்பான விதிவிலக்கானது பிரச்சனைக்குரிய ஆய்வுப்பொருளாக அமையலாம் என்பது புலனாகியது. அவ்வகையில், குறிப்பிட்ட இவ்விடயம் தொடர்பாக ஒரு இணக்கப்பாட்டை அடைந்துகொள்ளும் பொருட்டு மூன்றாந் திறத்தவருக்கும் மேன்முறையீட்டாளருக்கும் இடையில் ஒரு சந்திப்பினை ஒழுங்கு செய்யுமாறு ஆணைக்குழு 15.05.2018 அன்று பகிரங்க அதிகார சபைக்கு ஆணையிட்டது.

குறிப்பிட்ட சந்திப்பானது 23.05.2018 அன்று குறித்தளிக்கப்பட்ட அலுவலர், தகவல் அலுவலர் மற்றும் அமைச்சின் நிர்வாக அலுவலர் ஆகியோர் முன்னிலையில் மேன்முறையீட்டாளருக்கும் குறிப்பிட்ட மூன்றாந் திறத்தவருக்கும் இடையில் ஒழுங்கு செய்யப்பட்டது. மேன்முறையீட்டாளர் குறிப்பிட்ட மூன்றாந் திறத்தவரின் அந்தரங்கத்தினை பேணுவதாக ஆணைக்குழு முன்னிலையிலும், அதேவேளை மேற்குறிப்பிட்ட இரு திறத்தவர்களுக்கான சந்திப்பிலும் உறுதி கூறியபோதிலும், 28.05.2018 எனத் திகதியிடப்பட்ட குறித்தளிக்கப்பட்ட அலுவலரின் கடிதத்தில், குறிப்பிட்ட சந்திப்பின்போது மூன்றாந் திறத்தவர் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக தன்னுடைய நிலைப்பாட்டினை மாற்றிக்கொள்ளவில்லை என்றும் அறிக்கையின் முழுமையான வெளியீட்டினை தொடர்ந்தும் எதிர்ப்பதாகவும் கூறினார். இணக்கப்பாடொன்று எய்தப்படாத சந்தர்ப்பத்தில் மேன்முறையீட்டாளர் ஒன்றில் ஆணைக்குழுவிடமிருந்து (மேன்முறையீட்டுக்கான அவரது உரிமையினை பிரயோகிக்கக்கூடிய இடம்) இறுதி ஆணை ஒன்றினைக் கோருவார் அல்லது அறிக்கைக்கான முழுமையான அணுகுதல் அவருக்கு மறுக்கப்பட்டது என்பதனைக் குறிப்பாக குறிப்பிட்டு அறிக்கையின் உள்ளடக்கங்களை வெளிப்படுத்துவார் என குறிப்பிட்டிருந்தார்.

மேலும், 31.07.2018 அன்று ஆணைக்குழுவிற்கு அனுப்பிய அவரது எழுத்துமூலமான சமர்ப்பிப்புக்களில், குறிப்பிட்ட வாக்குமூலத்தை வழங்கிய அந்நபர் வல்வெட்டித்துறை மாநகர சபையின் செயலாளராக பணி புரிகின்றமையினால் அவ்வலுவலக பதவியின் காரணமாக சட்டத்தின் பிரிவு 5(1) (i) இன் கீழான மூன்றாந் திறத்தவர் என்ற எதிர்வாதத்தினை மேற்கொள்ள முடியாது என மேன்முறையீட்டாளர் வாதிட்டார். அவ்வாறு மூன்றாந் திறத்தவர் என்ற பிரதிவாதம் ஏற்புடையதாகுமெனினும் கூட, அவ் எதிர்வாதத்தினை அவ்வறிக்கையின் முழுமையான வெளியீட்டில் தங்கியுள்ள பகிரங்க அறிக்கையானது விஞ்சுகின்றது என அவர் கூறினார். பகிரங்க அல்லது அரசாங்க ஊழியரொருவராக இருக்கின்றமையானது மூன்றாந் திறத்தவரொருவராகக் கருதப்படமுடியாமைக்கான ஒரு காரணமாக அமையாது எனவும் அது ஒவ்வொரு நிகழ்வினதும் சந்தர்ப்ப சூழ்நிலைகளில் தங்கியுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்தது. (பார்க்க: 07.08.2018 இற்கான பதிவு)

இரு திறத்தவர்களும் அனுகூலமானதொரு இணக்கப்பாட்டினை எட்டுவதற்கு தவறியுள்ளமையினால் குறிப்பிட்ட இவ்வியடமானது இறுதி ஆணைக்காக ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படுகின்றது.

**ஆணைக்குழுவின் ஆணை**

தொடர்புற்றுள்ள முரண்படுகின்ற அக்கறைகளை சமநிலைப்படுத்துகின்றபோது, பிரிவு 5(1)(அ) மற்றும் (ஐ) என்பனவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அந்தரங்கம் மற்றும் மூன்றாந் திறத்தவர்களின் சம்மதம் ஆகிய விதிவிலக்குகளின் பிரயோகம் தொடர்பில் தக்க அவதானம் செலுத்தப்படுதல் வேண்டும். குறிப்பாக சட்டத்தின் பிரிவு 5(1)(i) இனை பிரிவு 29 உடன் இணைத்து வாசிக்கும்போது, குறிப்பிட்டத் தகவலை நம்பகத்தன்மையின் அடிப்படையில் வழங்கிய மூன்றாந் திறத்தவர் அத்தகவலை வெளியிடுவதற்கான அவரது சம்மதத்தை வழங்க மறுக்கின்றபோது (பிரிவு 29 (2) (இ)) அத்தகவலை வெளியிடாது மறுப்பதற்கு பகிரங்க அதிகார சபை நிர்ப்பந்திக்கப்படுகின்றபோதிலும் கூட, அப்பிரிவின் காப்பு வாசகமானது, குறிப்பிட்டத் தகவலின் வெளியிடுகையில் தங்கியுள்ள பகிரங்க அக்கறையானது தகவலை வெளிவிடாமைக்கானத் தனிப்பட்ட அக்கறையினை விஞ்சி நிற்கின்றவிடத்து அத்தகையத் தகவலை ஆணைக்குழுவின் ஆணையின் பேரில் வெளியிடலாம் என கூறுகின்றது.

*பிரேமலால் அபேசேகர எதிர் கல்வி அமைச்சு* என்ற வழக்கில், ''தகவலுக்கான உரிமைச் சட்டம் தொடர்புறுகின்ற சந்தர்ப்பங்களில் மற்றும் இவ் ஆணைக்குழுவானது பிரிவு 29 (2) (இ) இன் காப்பு வாசகத்தினை சட்டத்தின் பிரிவு 5(4) இல் விஞ்சி நிற்கின்ற பொது பகிரங்க அக்கறையுடன் இணைத்து வாசித்து அதன் பிரயோகத்தினை மதிப்பீடு செய்யத் தேவைப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களில் கவனத்திற் கொள்ள வேண்டிய ஒரேயொரு விடயம் யாதெனில் பகிரங்க அக்கறை குறித்த பிரச்சனையொன்று உள்ளதா எனத் தீர்மானித்தலே ஆகும். குறிப்பிட்ட இவ் வழக்கில், 'பகிரங்க அக்கறை' என்பதனை மதிப்பிடுவதற்கு இந்திய உச்ச நீதிமன்றத்தில் தீர்க்கப்பட்ட *பிஹார் பொது சேவைகள் ஆணைக்குழு எதிர் செயட் ஹுஸைன் அபாஸ் ரிஸ்வி மற்றும் ஏனையோர்* ([2013-2-L.W. 293 (Part 4)] at 301) என்ற வழக்கு ஆராயப்பட்டது. அவ்வழக்கில் பின்வருமாறு கூறப்பட்டது:

> "'பகிரங்க அக்கறை' என்ற சொல்லின் பொது வெளிப்பாடானது 'பொது நோக்கம்' என்பதனைப் போல ஓர் திட்டவட்டமான வரையறையினைக் கொண்டிருப்பதில்லை. அது ஒரு விறைப்பான அர்த்தத்தினைக் கொண்டிருப்பதில்லை. அது நெகிழ்வுத் தன்மையினை உடையதாக இருப்பதுடன் அதன் அர்த்தமானது அது உள்ளடங்கியுள்ள நியதிச்சட்டத்தின் தன்மையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. இக்கருத்தேற்பானது காலம், சமூகத்தின் நிலைப்பாடு மற்றும் அதன் தேவைகள் என்பனவற்றின் அடிப்படையில் மாற்றமடைகின்றது'' *ஜபீஹார் மாநிலம் எதிர் காமேஷ்வர் சிங்* (1952 SC 252) = (1952) 62 L.W. 527].

இவ்விடயத்துடன் தொடர்புறுகின்ற பகிரங்க அலுவலர் வல்வெட்டித்துறை நகர சபையின் 'இடித்துரைப்பாளரொருவராக (Whistleblower)' இருந்துள்ளமையினால், அதாவது வேறு வகையில் கூறுவோமாயின் அவர் அப்பணித்தளத்தில் இடம்பெற்ற ஊழல் மற்றும் தவறான செயல்கள் குறித்தத் தகவல்களைத் தெரிவித்து அதற்கான பொறுப்புடைமையினை நாடியிருந்தமையினால் குறிப்பிட்ட இச்சந்தர்ப்பத்தில் இவ்விதிவிலக்குகளை பகிரங்க அக்கறையின் அடிப்படையில் மதிப்பீடு செய்தல் மிகவும் முக்கியமானதாகும்.

பொறுப்புடைமை மற்றும் வெளிப்படைத்தன்மைக்காகப் போராடுதல் என்பன இடித்துரைப்பாளர்கள் மற்றும் தகவலுக்கான உரிமைப் பரப்பு என்பனவற்றின் செயல்களுக்கிடையிலான பொது அம்சமாகும். பகிரங்க அலுவலர்கள் குற்றங்களைச் சுட்டிக்காட்டுதல் மற்றும் தகவலுக்கான உரிமையினைப் பயன்படுத்துதல் ஆகிய இரண்டு நடடிவடிக்கைகளுமே ஊழலை எதிர்த்தல் மற்றும் பகிரங்கப் பொறுப்புடைமையினை மேம்படுத்துதல் ஆகிய ஒரே இலக்கை நோக்கியனவே ஆகும்.

அத்தகைய இடித்துரைப்பாளர்களைப் பாதுகாக்கின்ற தனியான ஒரு சட்டம் இருப்பில் இல்லாமையினால், இடித்துரைப்பாளர்களாகச் செயற்பட்டுள்ள அத்தகைய பகிரங்க அலுவலர்களின் பாதுகாப்பிற்கு ஊறினை ஏற்படுத்தக்கூடிய தகவல்களின் வெளிவிடுகைத் தொடர்பில் தீர்மானிக்கின்றபோது மிகவும் கவனமாக செயற்பட வேண்டிய கடமையினை இவ் ஆணைக்குழு கொண்டுள்ளது.

குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், இடித்துரைப்பாளராக செயற்பட்ட குறிப்பிட்ட பகிரங்க அலுவலரினால் அளிக்கப்பட்ட வாக்குமூலங்களே ஊழல் தொடர்பான விடயங்கள் வெளிப்படுவதற்கு முதனிலை காரணமாக அமைந்தன என்பதுடன், ஊழல் தொடர்பில் வெளிப்பட்டமையினைத் தொடர்ந்தே விசாரணையொன்று முன்னெடுக்கப்பட்டது என்பதுடன் அதனடிப்படையிலதான் நகர சபை கலைக்கப்பட்டு புதிய சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர் என்ற விடயம் மீளவும் எடுத்துக்காட்டப்பட்டது. ஆகவே, பிரச்சனைக்குட்படுத்தப்பட்டுள்ள இச் செயல்கள் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பாயிரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ‘ஊழலை எதிர்த்தல் மற்றும் வெளிப்படைத் தன்மையினை வளர்த்தல்’ போன்ற குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காகவே செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பார்க்கின்றபோது, பகிரங்க அக்கறையுடன் செயற்படுகின்ற இடித்துரைப்பாளர்களை, அதன் விளைவாக அவர்களுக்கு எதிராக எழுகின்ற பழிவாங்கல் நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பதற்கான நியதிச்சட்டப் பொறிமுறைகளை உருவாக்குவது தொடர்பில் இலங்கை சிந்திக்க வேண்டும் என நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். அவ்வாறு செய்யத் தவறுகின்றமையானது ஒரு எதிர்மறையானத் தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதுடன் எதிர்காலத்தில் பகிரங்க அதிகாரிகள் தைரியமாக அத்தகைய ஊழல் தொடர்பான விபரங்களை வெளியிடுவதற்குத் தடையாக அமையும்.

இடித்துரைப்பாளர்களுக்கான நியதிச்சட்ட பாதுகாப்பிற்கானத் தேவை உலகளாவிய ரீதியில் உணரப்பட்டுள்ளதுடன் சில நாடுகள் அத்தகைய சட்டவாக்கத்தின் பரப்பினை தனியார் குழாத்தினருக்கும் ஏற்புடையதாக்குகின்றது. இடித்துரைப்பாளர்களின் பாதுகாப்பு தொடர்பில் அக்கறை கொண்டு முதலில் செயற்பட ஆரம்பித்த ஐக்கிய அமெரிக்காவானது 1863 ஆம் ஆண்டில் *தவறான கோரிக்கைகள் சட்டம்* (*False Claims Act*) என்ற சட்டவாக்கத்தினை உருவாக்கியதுடன், காலத்திற்கு காலம் அதன் பாதுகாப்பு பரப்பை விஸ்தீரணப்படுத்தியது. உதாரணமாக, 2007 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இடித்துரைப்பாளர்களுக்கான *பாதுகாப்பு மேம்படுத்தல் சட்டமானது* (*Protection Enhancement Act of 2007)* இச்சட்டத்தின் பிரயோகத்தினை அனைத்து கூட்டாட்சி ஊழியர்களுக்கும் ஏற்புடையதாக்கியது. மிகவும் அண்மையில், 2016 ஆம் ஆண்டு ஸ்வீடன் நாட்டில் ஆக்கப்பட்ட *பாரதூரமான தவறுகள் தொடர்பில் தெரியப்படுத்துகின்ற ஊழியர்களின் ஊறுபாட்டிற்கெதிரான விசேட பாதுகாப்பு சட்டமானது* (*Special Protection Against Victimisation of Workers Who are Sounding the Alarm About Serious Wrongdoings*) தொழிற்தருனர்களின் வியாபாரத்தில் இடம்பெறுகின்ற பாரதூரமான தவறுகள் தொடர்பில் அறிக்கையிடுகின்ற ஊழியர்கள் மற்றும் தற்காலிக ஊழியர்களைப் பழிவாங்கல்களிலிருந்து பாதுகாக்கின்றது. மேலும், அச்சட்டமானது ஊழியர்களின் இடித்துரைப்பிற்கு பின்னரான பாதுகாப்பினை மட்டுப்படுத்துகின்ற

எந்தவொரு உடன்பாட்டினையும் வலிதற்றதாக்குகின்றது. பிராந்திய ரீதியில் பார்ப்போமாக இருப்பின், சட்டத்தின் வினைத்திறனான அமுலாக்கம் தொடர்பாக விமர்சனங்கள் எழுந்துள்ளபோதிலும் கூட இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் முறையே 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இடித்துரைப்பாளர்களுக்கான பாதுகாப்பு சட்டங்களை உருவாக்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஊழலுக்கெதிரான சமவாயத்தின் உறுப்புரை 33 ஆனது அச்சமவாயத்தினை அவர்களுடைய உள்நாட்டுப் பொறிமுறையில் உள்வாங்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் மற்றும் இடித்துபைப்பாளர்களாகிய சாட்சிகள், அவர்களது குடும்பங்களை நீதியற்ற நடாத்துகையிலிருந்து பாதுகாப்பதற்கான ஏனைய ஏற்பாடுகளை முன்னெடுக்கும்படியும் சமவாயத்தில் கையொப்பமிட்ட நாடுகளை ஊக்கப்படுத்துகின்றன. இலங்கையும் இச்சமவாயத்திற்கான ஒரு திறத்தவராக உள்ளது என்ற ரீதியில், ஊழலை எதிர்ப்பதற்கான மற்றும் வெளிப்படைத்தன்மையினை வளர்ப்பதற்கான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ள இடித்துரைப்பாளர்களைப் பாதுகாப்பதற்கான பொருத்தமான பொறிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு உள்ளது. இடித்துரைப்பாளர்களைப் பாதுகாக்கின்ற சட்டவாக்கமானது, அதே இலக்கினைக் கொண்டுள்ள தகவலுக்கான உரிமைப் பரப்பினை முழுமையாக்குவதாக அமையும் என்பதனை ஆணைக்குழு கவனத்திற் கொண்டது. அத்தகைய சட்டமானது, தற்போது எழுந்துள்ள பிரச்சனை போன்று, கோரப்படுகின்ற தகவல் உரிமைக் கோரிக்கைகளால் இடித்துரைப்பாளர்களுக்கு ஊறு ஏற்படுகின்றதான சந்தர்ப்பங்களில் எழுகின்ற முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு ஏற்றதாய் அமையும். எவ்வாறெனினும் அத்தகைய ஒரு சட்டம் இயற்றப்படுகின்ற வரையில், ஜனநாயக சமூகத்தின் செயற்பாட்டிற்கு அவசியமான விழுமங்கள் ஒன்றுடனொன்று முரண்படுகின்றபோது தனது தற்துணிபினை பிரயோகிப்பதற்கான கடப்பாடு ஆணைக்குழுவிற்கு உள்ளது.

மேலும், பிரிவு 5(1)(அ) மற்றும் (ஐ) இன் கீழ் குறிப்பிடப்படுகின்ற அந்தரங்கம் மற்றும் மூன்றாந் திறத்தவர்களின் எதிர்ப்பு போன்ற விதிவிலக்குகள் தகவல்களின் வெளிவிடுகை ஊறினை ஏற்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்களில் ஏற்புடையதாகும் என்பதும் இங்கு கவனத்திற்கொள்ள வேண்டிய விடயமாகும். *இரண்டாம் நிலை கல்விக்கான மத்திய சபை மற்றும் ஏனையோர் எதிர் ஆதித்யா பண்டோபதயய் மற்றும் ஏனையோர்* ((2011) 8 SCC 497) என்ற வழக்கிலே இந்திய உச்ச நீதிமன்றமானது, 2005 ஆம் ஆண்டின் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்குகளானவை 'தகவலுக்கான உரிமையினை கட்டுப்படுத்துகின்ற ஒன்றாகப் பார்க்கப்படக்கூடாது, ஆனால் அவை ஜனநாயக தத்துவங்களை பூர்த்தி செய்கின்ற ஏனைய பகிரங்க அக்கறைகளை பாதுகாக்கின்ற ஏற்பாடுகளாகக் கருதப்பட்டு அவற்றிற்கு சமனான முக்கியத்துவம் வழங்கப்படுதல் வேண்டும்' என கூறியுள்ளது.

குறிப்பிட்ட வழக்கின் தன்மை மற்றும் குறித்த தகவல்கள் வெளியிடப்பட்டால் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்படுவோம் என்ற பகிரங்க அலுவலரின் அச்சம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றபோது, நகர சபை கலைக்கப்படுவதற்கு முன்னர் என்ன நடந்தது என்பதனை அறிந்து கொள்வதற்கான உரிமை பொது மக்களுக்கு காணப்படுகின்ற போதிலும், குறிப்பிட்ட அறிக்கையின் குறிப்பிட்ட பகுதி மட்டும் நீக்கப்படுவதனால் பகிரங்க அக்கறை எவ்வகையில் பாதிக்கப்படுகின்றது என்பதனை மேன்முறையீட்டாளர் நிரூபிக்கத்தவறியுள்ளார். மேலும், பகிரங்க அதிகார சபையானது அறிக்கையிலுள்ள அனைத்து உள்ளடக்கங்களையும் முழுமையாக வெளியிடுகின்ற சந்தர்ப்பத்தில் பகிரங்க அக்கறையானது எவ்வாறு அதிகமாக அல்லது வேறுபட்ட முறையில் பாதுகாக்கப்படும் என்பதனை ஆணைக்குழுவால் கண்டறிய முடியவில்லை.

ஆகவே, குறிப்பிட்ட பகிரங்க அதிகாரியின் அந்நதரங்கத்திற்கான உரிமையினை முழுவதுமாய் கவனத்திற்கெடுத்து மற்றும் அறிக்கையினை முழுமையாக வெளியிடுகின்ற பட்சத்தில் எழக்கூடிய எதிர்மறையான விளைவுகள் தொடர்பில் தகுந்த அவதானம் செலுத்தி ஆராய்கின்றபோது, இச்சந்தர்ப்பத்தில் வெளியிடப்படாதுள்ள குறிப்பிட்ட தகவலின் வெளிவிடுகையினை பிரிவு 5(1)(அ) தடை செய்கின்றது என்பதுடன் சட்டத்தின் பிரிவு 29 (2) (இ) இன் காப்பு வாசகத்தினை பகிரங்க அக்கறை விஞ்சி நிற்கின்ற பிரிவு 5(4) உடன் இணைத்து வாசிக்கின்றபோது குறிப்பிட்ட தகவலை வெளியிடுமாறு பணிப்பதற்கான ஆணையொன்றை வழங்குவது தொடர்பில் அது ஏற்புடையதாகாது என்றும் நாம் தீர்க்கின்றோம்.

பகிரங்க அதிகார சபையின் தீர்மானமானது (மீளாய்வு செய்யப்பட்ட, குறிப்பிட்ட விசாரணை ஆரம்பிப்பதற்கு பிரதான காரணமாக அமைந்த முறைப்பாட்டினை மேற்கொண்ட பகிரங்க அதிகாரியின் வாக்குமூலத்தினை உள்ளடக்கிய பகுதியினை மாத்திரம் நீக்கிவிட்டு அறிக்கையின் ஏனைய பகுதிகளை மேன்முறையீட்டாளருக்கு வழங்க வேண்டும் என்ற தீர்மானம்) உறுதி செய்யப்படுகின்றது. கட்டணம் மற்றும் நடபடிமுறைகள் மீதான தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவின் விதிகளில் (வர்த்தமானி இல. 2004/ 66, 03.02.2017) 27(3) ஆம் விதிக்கு அமைவாக ஆணை இரு தரப்பினருக்கும் அனுப்பப்படுதல் வேண்டும் என பணிக்கப்படுகின்றது.